**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 52/2023 |
| P.W. | : 1 |
| Name | : திரு. மைக்கேல் ஆண்டனி |
| Father Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.07.2025..

எதிரி ஆஜர்.

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ரஜாகிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். 03-09-2022 அன்று நான் வேலைக்கு சென்றுவிட்டு 8.00 அல்லது 8.30 மணி அளவில் வந்து படுத்தேன். விடியற்காலையில் எழுந்து பார்த்தபோது எங்கள் வீட்டு வாசல் முன்பாக என்னுடன் வேலை செய்த நபர் சுஜின் ரத்தக்கறையுடன் படுத்திருந்தார். இது குறித்து எனது முதலாளிக்கு நான் போன்மூலமாக தகவல் சொன்னேன். என் முதலாளி என்னிடம் போலீசுக்கு தகவல் கொடுக்குமாறு சொன்னார். போலீசார் வந்தனர் என்னை விசாரித்தனர். போலீசார் வந்து பார்த்த சமயம் மேற்படி படுத்திருந்த நபர்

இறந்துபோய்விட்டதாக சொன்னார்கள். மேற்படி நபர் எப்படி இறந்துபோய்விட்டார் என்று எனக்க நேரில் தெரியவில்லை. வழக்கு பற்றி வேறு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் ஆமாம். மேற்படி புகாரில் உள்ள **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1.** மேற்படி புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத அனுமதி கோரப்பட்டு அதன்பேரில் சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.**

நான் கவுந்தப்பாடியில் சென்ட்டிரிங் வேலை செய்து வந்த சமயம் 03-09-2022 அன்று அத்தாணியில் எங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு இரவு 8 மணிக்கு கவுந்தப்பாடிக்கு வந்து தகரக்கொட்டாயில் தங்கியதாகவும், 04-09-2022 அன்று ஞாயிறு விடுமுறை என்பதால் நான் என்னுடன் தங்கியிருந்த ரமேஷ், சுயம்பு, முருகன், சுஜித், செல்வக்குமார், ஜார்ஜ், விஜயன், மற்றும் மைக்கேல் ராஜ் அனைவரும் சாப்பிட்டு தூங்க சென்றுவிட்டோம். பின்னிட்டு வெளியில் இருந்த 2 டியூப் லைட்டுகளை போட்டு பொழுதுபோக்கிற்காக நானும், முனிராஜ், ரமேஷ், செல்வக்குமார், சுஜின், முருகன் ரம்மி விளையாடியதாகவும், அதில் ஆட்டத்திற்கு 100 பந்தயம் இருக்கும், மேற்படி பந்தயத்தில் முனிராஜ், செல்வக்குமார், செந்தில்குமார் ஆகியோர் தோற்றுபோனதால் தூங்கசென்றுவிட்டதாகவும், நானும், ரமேஷ், சுஜின் தொடர்ந்து விளையாடிய சமயத்தில் அதிகாலை 1 மணிக்கு ரமேஷ், தனது பாயிண்ட்டை,குறைத்து போட்டதாக சுஜினை கெட்டவார்த்தையால் பேசி சண்டையிட்டு இருவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், இந்நிலையில் இருவரையும் நான் சமாதானம் செய்து வைத்து தூங்கபோகுமாறு அறிவுரை சொன்னதாகவும், அப்போது இருவரும் மாறி மாறி வாக்குவாதம் செய்ததாகவும், 1.30 மணிக்கு சுஜின் பாயை விரித்து படுத்தாகவும், அப்போது ரமேஷ் திடீரென கீழே கிடந்த கடப்பாரை கம்பியை எடுத்து கெட்ட வார்த்தையால் சுஜினை திட்டி சுஜினின் இடது பக்க தலையில் அடித்ததாகவும், அப்போது நானும், முனிரைாஜ், விஜயன் ஆகியோர் ரமேஷை

பிடித்து விலக்கிவிட்டதாகவும், சுஜினுக்கு தலையில் அடிபட்டதால் அதிகமான ரத்தம் வந்து மயங்கிவிட்டார் அதை பார்த்த ரமேஷ் கடப்பாரையை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார். அதிக ரத்தப்போக்கு காரணமாக சுஜின் இறந்துவிட்டதாகவும், இது குறித்து எனது ஓனர் ரூபேஷுக்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும், அவர் அறிவுறுத்தியன்பேரில் நாங்கள் கவுந்தப்பாடி காவல்நிலையம் சென்று நான் ரமேஷ் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும், போலீசார் சம்பவ இடம் வந்து புலன்விசாரணை மேற்கொண்டு இறந்துபோன சுஜினின் உடலை பிரேத விசாரணை செய்த சமயத்தில் நானும் உடனிருந்ததாகவும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 52/2023 |
| P.W. | : 2 |
| Name | : திரு. முனிராஜ் |
| Father Name | : திரு. நாகராஜ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 25 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.07.2025..

எதிரி ஆஜர்.

<u>முதல் விசாரணை :-</u>

என் சொந்த ஊர் கிருஷ்ணகிரி மாவட்டம். தற்போது கவுந்தப்பாடியில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். என்னுடன் வேலை செய்து வந்தார். இறந்துபோன சுஜினும் என்னுடன் வேலை செய்து வந்தார். 03-09-2022 அன்று நான் கவுந்தப்பாடியில் சுஜின், ரமேஷ், மைக்கேல் ஆண்டனி, செந்தில்குமார், முருகன் ஆகியோர்கள் வேலை செய்து வந்தோம். வேலை முடித்துவிட்டு நாங்கள் இரவு தங்கும் இடத்திற்கு வந்தோம், குளித்து விட்டு சாப்பிட்டுவிட்டு தூங்கிவிட்டோம். காலையில் எழுந்து பார்க்கும்போது சுஜின் இரத்தக்கறையுடன் இறந்துகிடந்தார். அவர் எவ்வாறு இறந்தார் என்று எனக்கு தெரியவில்லை. இது குறித்து கவுந்தப்பாடி

ஸ்டேசனுக்கு நாங்கள் அனைவரும் சென்று தகவல் சொன்னோம். போலீசார் வந்து எங்களை விசாரித்தனர் நடந்ததை சொன்னேன். வேறு சங்கதிகளைத் தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத அனுமதி கோரப்பட்டு அதன்பேரில் சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.**

நான் கவுந்தப்பாடியில் சென்ட்டிரிங் வேலை செய்து வந்த சமயம் 03-09-2022 அன்று அத்தாணியில் எங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு இரவு 8 மணிக்கு கவுந்தப்பாடிக்கு வந்து தகரக்கொட்டாயில் தங்கியதாகவும், 04-09-2022 அன்று ஞாயிறு விடுமுறை என்பதால் நான் என்னுடன் தங்கியிருந்த மைக்கேல் ஆண்டனி, ரமேஷ், சுயம்பு, முருகன், சுஜித், செல்வக்குமார், ஜார்ஜ், விஜயன், மற்றும் மைக்கேல் ராஜ் அனைவரும் சாப்பிட்டு தூங்க சென்றுவிட்டோம். பின்னிட்டு வெளியில் இருந்த 2 டியூப் லைட்டுகளை போட்டு பொழுதுபோக்கிற்காக மைக்கேல் ஆண்டனி, நான், ரமேஷ், செல்வக்குமார், சுஜின், முருகன் ரம்மி விளையாடியதாகவும், அதில் ஆட்டத்திற்கு 100 பந்தயம் இருக்கும், மேற்படி பந்தயத்தில் நானும், செல்வக்குமார், செந்தில்குமார் ஆகியோர் தோற்றுபோனதால் தூங்கசென்றுவிட்டதாகவும், மைக்கேல் ஆண்டனி, ரமேஷ், சுஜின் தொடர்ந்து விளையாடிய சமயத்தில் அதிகாலை 1 மணிக்கு ரமேஷ், தனது பாயிண்ட்டை,குறைத்து போட்டதாக சுஜினை கெட்டவார்த்தையால் பேசி சண்டையிட்டு இருவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், இந்நிலையில் இருவரையும் மைக்கேகல் ஆண்டனி சமாதானம் செய்து வைத்து தூங்கபோகுமாறு அறிவுரை சொன்னதாகவும், அப்போது இருவரும் மாறி மாறி வாக்குவாதம் செய்ததாகவும், 1.30 மணிக்கு சுஜின் பாயை விரித்து படுத்தாகவும், அப்போது ரமேஷ் திடீரென கீழே கிடந்த கடப்பாரை கம்பியை எடுத்து கெட்ட வார்த்தையால் சுஜினை திட்டி சுஜினின் இடது பக்க தலையில் அடித்ததாகவும், அப்போது நானும், மைக்கேல் ஆண்டனியும், விஜயன் ஆகியோர் ரமேஷை பிடித்து விலக்கிவிட்டதாகவும், சுஜினுக்கு தலையில் அடிபட்டதால் அதிகமான ரத்தம் வந்து மயங்கிவிட்டார் அதை பார்த்த ரமேஷ் கடப்பாரையை அங்கேயே

போட்டுவிட்டு ஓடிவிட்டார். அதிக ரத்தப்போக்கு காரணமாக சுஜின் இறந்துவிட்டதாகவும், இது குறித்து எனது ஓனர் ரூபேஷுக்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும், அவர் அறிவுறுத்தியன்பேரில் நாங்கள் கவுந்தப்பாடி காவல்நிலையம் சென்று மைக்கேல் ஆண்டனி ரமேஷ் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும், போலீசார் சம்பவ இடம் வந்து புலன்விசாரணை மேற்கொண்டு இறந்துபோன சுஜினின் உடலை பிரேத விசாரணை செய்த சமயத்தில் நானும் உடனிருந்ததாகவும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | | |
|---|---|---|
| SC.No. | : | 52/2023 |
| P.W. | : | 3 |
| Name | : | திரு. ஜேசு விஜயன் |
| Father Name | : | திரு. சிலுவை மைக்கேல் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.07.2025..

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் கன்னியாகுமரி மாவட்டம், ராஜாவூரில் குடியிருந்து தச்சு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். சுஜின் என்பவரை சம்பவத்திற்கு 2 நாட்களுக்கு முன்புதான் தெரியும். அ.சா.1 மற்றும் 2 ஐ தெரியும். 03-09-2022 அன்று நான் இரவு தூங்கிவிட்டேன். நடு இரவு 1.30 மணி அளவில் நான் என் காலை கடன் முடிப்பதற்காக வெளியே வந்த சமயம் சுஜின் ரத்தக்கறையுடன் அடிபட்டு கீழே கிடந்தார். அந்த இடத்தில் முனிராஜ், மைக்கேல் ஆண்டனி, செல்வக்குமார், முருகன் ஆகியோர்கள் இருந்தார்கள். மேற்படி சம்பவம் குறித்து ஓனரிடம் தகவல் சொன்னோம். அவர்கள் ஸ்டேசனுக்கு போகச்சொன்னார்கள். இது குறித்து கவுந்தப்பாடி காவல்நிலையம் சென்று

புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர் நடந்ததைச் சொன்னோம்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத அனுமதி கோரப்பட்டு அதன்பேரில் சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.**

நான் கவுந்தப்பாடியில் சென்ட்டிரிங் வேலை செய்து வந்த சமயம் 03-09-2022 அன்று அத்தாணியில் எங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு இரவு 8 மணிக்கு கவுந்தப்பாடிக்கு வந்து தகரக்கொட்டாயில் தங்கியதாகவும், 04-09-2022 அன்று ஞாயிறு விடுமுறை என்பதால் நான் என்னுடன் தங்கியிருந்த மைக்கேல் ஆண்டனி, ரமேஷ், சுயம்பு, முருகன், சுஜித், செல்வக்குமார், ஜார்ஜ், விஜயன், மற்றும் மைக்கேல் ராஜ் அனைவரும் சாப்பிட்டு தூங்க சென்றுவிட்டோம். பின்னிட்டு வெளியில் இருந்த 2 டியூப் லைட்டுகளை போட்டு பொழுதுபோக்கிற்காக மைக்கேல் ஆண்டனி, நான், ரமேஷ், செல்வக்குமார், சுஜின், முருகன் ரம்மி விளையாடியதாகவும், அதில் ஆட்டத்திற்கு 100 பந்தயம் இருக்கும், மேற்படி பந்தயத்தில் நானும், செல்வக்குமார், செந்தில்குமார் ஆகியோர் தோற்றுபோனதால் தூங்கசென்றுவிட்டதாகவும், மைக்கேல் ஆண்டனி, ரமேஷ், சுஜின் தொடர்ந்து விளையாடிய சமயத்தில் அதிகாலை 1 மணிக்கு ரமேஷ், தனது பாயிண்ட்டை,குறைத்து போட்டதாக சுஜினை கெட்டவார்த்தையால் பேசி சண்டையிட்டு இருவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், இந்நிலையில் இருவரையும் மைக்கேகல் ஆண்டனி சமாதானம் செய்து வைத்து தூங்கபோகுமாறு அறிவுரை சொன்னதாகவும், அப்போது இருவரும் மாறி மாறி வாக்குவாதம் செய்ததாகவும், 1.30 மணிக்கு சுஜின் பாயை விரித்து படுத்தாகவும், அப்போது ரமேஷ் திடீரென கீழே கிடந்த கடப்பாரை கம்பியை எடுத்து கெட்ட வார்த்தையால் சுஜினை திட்டி சுஜினின் இடது பக்க தலையில் அடித்ததாகவும், அப்போது நானும், மைக்கேல் ஆண்டனியும், விஜயன் ஆகியோர் ரமேஷை பிடித்து விலக்கிவிட்டதாகவும், சுஜினுக்கு தலையில் அடிபட்டதால் அதிகமான ரத்தம் வந்து மயங்கிவிட்டார் அதை பார்த்த ரமேஷ் கடப்பாரையை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார். அதிக ரத்தப்போக்கு காரணமாக சுஜின்

இறந்துவிட்டதாகவும், இது குறித்து எனது ஓனர் ரூபேஷுக்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும், அவர் அறிவுறுத்தியன்பேரில் நாங்கள் கவுந்தப்பாடி காவல்நிலையம் சென்று மைக்கேல் ஆண்டனி ரமேஷ் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும், போலீசார் சம்பவ இடம் வந்து புலன்விசாரணை மேற்கொண்டு இறந்துபோன சுஜினின் உடலை பிரேத விசாரணை செய்த சமயத்தில் நானும் உடனிருந்ததாகவும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 52/2023 |
| P.W. | : 4 |
| Name | : திரு. செந்தில்முருகன் |
| Father Name | : திரு. மோகன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.07.2025..

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் திருநெல்வேலி மாவட்டம், மாடம்பிள்ளை தர்மம் என்ற இடத்தில் குடியிருந்து தச்சு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இறந்துபோன சுஜின் என்பவரைத் தெரியும் மேற்படி இருவரும் என்னுடன் வேலை செய்து வந்தார்கள். 03-09-2022 அன்று சனிக்கிழமை என்பதால் இரவு சாப்பிட்டு விட்டு 9 மணிக்கு தூங்க சென்றுவிட்டேன். விடியற்காலை 2 அல்லது 3 மணிக்கு நான் வெளியே வந்து பார்த்த சமயம் சுஜின் ரத்த வெள்ளத்தில் படுத்துகிடந்தார். என்னுடன் தங்கியிருந்த மைக்கேல் ஆண்டனி, செல்வக்குமார், விஜயன், ஆகியோர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தனர். போலீசார் அங்கு வந்து எங்களை விசாரித்தனர். நடந்ததைச்

சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத அனுமதி கோரப்பட்டு அதன்பேரில் சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.**

நான் கவுந்தப்பாடியில் சென்ட்டிரிங் வேலை செய்து வந்த சமயம் 03-09-2022 அன்று அத்தாணியில் எங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு இரவு 8 மணிக்கு கவுந்தப்பாடிக்கு வந்து தகரக்கொட்டாயில் தங்கியதாகவும், 04-09-2022 அன்று ஞாயிறு விடுமுறை என்பதால் நான் என்னுடன் தங்கியிருந்த மைக்கேல் ஆண்டனி, ரமேஷ், சுயம்பு, முருகன், சுஜித், செல்வக்குமார், ஜார்ஜ், விஜயன், மற்றும் மைக்கேல் ராஜ் அனைவரும் சாப்பிட்டு தூங்க சென்றுவிட்டோம். பின்னிட்டு வெளியில் இருந்த 2 டியூப் லைட்டுகளை போட்டு பொழுதுபோக்கிற்காக மைக்கேல் ஆண்டனி, நான், ரமேஷ், செல்வக்குமார், சுஜின், முருகன் ரம்மி விளையாடியதாகவும், அதில் ஆட்டத்திற்கு 100 பந்தயம் இருக்கும், மேற்படி பந்தயத்தில் நானும், செல்வக்குமார், செந்தில்குமார் ஆகியோர் தோற்றுபோனதால் தூங்கசென்றுவிட்டதாகவும், மைக்கேல் ஆண்டனி, ரமேஷ், சுஜின் தொடர்ந்து விளையாடிய சமயத்தில் அதிகாலை 1 மணிக்கு ரமேஷ், தனது பாயிண்ட்டை,குறைத்து போட்டதாக சுஜினை கெட்டவார்த்தையால் பேசி சண்டையிட்டு இருவருக்கும் தகராறு ஏற்பட்டதாகவும், இந்நிலையில் இருவரையும் மைக்கேகல் ஆண்டனி சமாதானம் செய்து வைத்து தூங்கபோகுமாறு அறிவுரை சொன்னதாகவும், அப்போது இருவரும் மாறி மாறி வாக்குவாதம் செய்ததாகவும், 1.30 மணிக்கு சுஜின் பாயை விரித்து படுத்தாகவும், அப்போது ரமேஷ் திடீரென கீழே கிடந்த கடப்பாரை கம்பியை எடுத்து கெட்ட வார்த்தையால் சுஜினை திட்டி சுஜினின் இடது பக்க தலையில் அடித்ததாகவும், அப்போது நானும், மைக்கேல் ஆண்டனியும், விஜயன் ஆகியோர் ரமேஷை பிடித்து விலக்கிவிட்டதாகவும், சுஜினுக்கு தலையில் அடிபட்டதால் அதிகமான ரத்தம் வந்து மயங்கிவிட்டார் அதை பார்த்த ரமேஷ் கடப்பாரையை அங்கேயே போட்டுவிட்டு ஓடிவிட்டார். அதிக ரத்தப்போக்கு காரணமாக சுஜின்

இறந்துவிட்டதாகவும், இது குறித்து எனது ஓனர் ரூபேஷுக்கு போன் செய்து தகவல் சொன்னதாகவும், அவர் அறிவுறுத்தியன்பேரில் நாங்கள் கவுந்தப்பாடி காவல்நிலையம் சென்று மைக்கேல் ஆண்டனி ரமேஷ் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தாகவும், போலீசார் சம்பவ இடம் வந்து புலன்விசாரணை மேற்கொண்டு இறந்துபோன சுஜினின் உடலை பிரேத விசாரணை செய்த சமயத்தில் நானும் உடனிருந்ததாகவும் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure )**

**IN THE COURT OF III ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, GOBICHETTIPALAYAM**

| | |
|---|---|
| SC.No. | : 52/2023 |
| P.W. | : 5 |
| Name | : திரு. செல்வக்குமார் |
| Father Name | : திரு. பெரியசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 29.07.2025..

எதிரி ஆஜர்.

<u>**முதல் விசாரணை :-**</u>

நான் திருநெல்வேலி மாவட்டம், கண்ணன்குளத்தில் குடியிருந்து கொத்துவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். இறந்துபோன சுஜினைத் தெரியும். 9ம் மாதம் விநாயகர் சதுர்த்திக்கு முன்பு ஒருநாள் சனிக்கிழமை நாங்கள் இரவு வேலை முடித்து சாப்பிட்டு விட்டு பஸ் ஸ்டேண்டுக்கு போய் தூங்கிவிட்டேன். காலையில் மேற்படி ரமேஷ், சுஜின், மற்றும் என்னுடன் வேலை செய்த சிலர் தங்கியிருந்த ஷெட்டிற்கு சென்றேன். அப்போது சுஜின் ரத்தவெள்ளத்தில் இறந்துகிடந்தார். போலீசார் அங்கு வந்து சம்பவம் குறித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருத அனுமதி கோரப்பட்டு அதன்பேரில் சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 03-09-2022 அன்று மாலையில் சுஜின் , ரமேஷ், மைக்கேல் ஆண்டனி மற்றும் சிலர் சாப்பிட்டு சீட்டு விளையாடியதாகவும், அப்போது ரமேஷுக்கும், சுஜின்னுக்கும் இடையே வாய்தகராறு ஏற்பட்டு ஒருவருக்கொருவர் கெட்ட வார்த்தையால் திட்டிக்கொண்டதாகவும், அப்போது அவர்களை அங்கு தங்கியிருந்த ஆண்டனி, முருகன், முனிராஜ், மற்றும் சிலர் சமாதானம் செய்து வைத்ததாகவும், விடியற்காலை 1.30 மணி அளவில் ரமேஷ் அருகில் இருந்த கடப்பாரை கம்பியால் பாயில் படுத்திருந்த சுஜினை தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தியதாகவும், அதனால் மேற்படி சுஜின் இறந்துபோய்விட்டதாக நான் கேள்விப்பட்டதாகவும், போலீசார் சுஜின் உடலின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட சமயத்தில் நான் சாட்சியாக இருந்து கையெழுத்து செய்ததாகவும் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**